www.padippakam.com

# சுழிபுரம் இளைஞர்கள் கொலை

## ஒரு திட்டமிட்ட சதி?

அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஒரு சிலர் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திற்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளிலும், பிரச்சார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். ஐக்கிய முன்னணி தொடர்பான பேச்சுவார்த்தைகளில் நமது இயக்கங்கள் ஈடுபட்டுள்ள சமயத்தில், இத்தகைய முயற்சிகளை குழப்பும் நடவடிக்கைகளில் புலிகளை சேர்ந்த ஒரு சிலர் ஈடுபடுவது தமிழ் பேசும் மக்களது வரலாற்றில் ஆபத்தானதும், துர்ரதிஸ்டவசமானதுமான பின்னடைவாகும்.

அண்மையில் மக்கள் விடுதலையா? மனித வேட்டையா? என்னும் தலைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஒரு துண்டு பிரசுரத்தை வெளியிட்டிருந்தனர். அதில் எமது பெயரையும் சம்பந்தப்படுத்தி பல அபாண்டமான குற்றச் சாட்டுகளை, அவதூறுகளை கொட்டி இருப்பதனால் அத்துண்டறிக்கை சம்பந்தமான எமது கருத்தை தெரிவிப்பது அவசியமாகிறது.

அண்மையில் கழகச் செயலதிபர் தோழர் உமாமகேஸ்வரன் அவர்கள் தளப்பிரதேச வேலைகள் காரணமாக இங்கு வந்திருந்தபோது அவரது பாதுகாப்புக் கருதி அவர் இருந்த பிரதேசத்தைச் சுற்றி சில மைல்கள் தூரங்களுக்கு கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. இந்த ஏற்பாடுகளைக் கண்டு நாம் ஒரு பெரிய நடவடிக்கைக்கு தயாராகவும் அதனையிட்டு முக்கிய தோழர்கள் வந்திருக்கலாம் எனவும் நம்பி தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் மூன்று தடவைகள் மூன்று குழுக்களாக ஆயுதம் சகிதமாக காவலுக்கு நின்றவர்களை விரட்டிவிட்டு ஊடுருவிச் சென்றார்கள். இச் செய்தி கேட்டு எமது தோழர்கள் இவ்வாறு ஊடுருவியவர்களைச் சுற்றி வளைத்தார்கள்.

இவர்களை விசாரித்தபோது இரண்டு குழுவினர் தாங்கள் குறிப்பிட்ட சில கழக முன்னணித் தோழர்களுடைய பெயர்களை குறிப்பிட்டு அவர்களைச் சந்திக்க வந்ததாக கூறினார்கள். கழகத் தோழர்களைச் சந்திப்பதாயின் எமக்கு ஆட்சேபனை இல்லை என்றும் ஆனால் அப்படி சந்திக்க வருவதாயின் உரிய முறையில் உரிய தோழர்களைச் சந்தித்துப் பேசினால் அதற்கான ஒழுங்குகளைச் செய்ய முடியும் என்றும் அதை விடுத்து ஆயுதம் தாங்கியவாறு இவ்வாறு உலாவுதல் எமக்கு சந்தேகமூட்டுவதாகவும் கூறி எச்சரித்து விடுவிக்கப்பட்டனர். மூன்றாவது குழுவினர் தங்களுடைய சுவரொட்டியை ஒட்டச் சென்ற ஆறு தோழர்களை காணாததால் தேடி வந்ததாக கூறினார்கள். இவர்கள் விரும்பிய பகுதியில் சென்று பார்வையிட அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு ஊடுருவிய மூன்று குழுவினரின் வார்த்தைகளிலும் எமக்கு நம்பிக்கை இல்லை என்ற போதிலும் அவர்கள் உளவறிவதிலும் எமது முக்கிய தோழர்களை கொலை செய்ய முயலலாம் என நாம் கருதிய போதும் இது ஒற்றுமைக்குரிய காலம் என்பதால் பேசித்தீர்த்துக்கொள்ளலாம் என்ற அடிப்படையில் எச்சரித்து விடுவிக்கப்பட்டார்கள். எமது தலைவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்திய நாம் இத்தகைய எதிர் நடவடிக்கைகள் தொடர்பாக மிகுந்த நிதானத்தை கடைப்பிடித்திருந்தோம்.

ஒருசில தினங்களின் பின்பு ஒதுக்குப்புறமான பற்றைகள் அடர்ந்த கடற்கரை ஓரத்தில் அழுகிய சடலங்களின் சில பகுதிகளை எமது தோழர்கள் கண்டதனை அடுத்து அதனைத் தோண்ட ஆரம்பித்தனர். இதனை அடுத்து கிராமத்து மக்களும் சேர்ந்து கொண்டார்கள். சற்று தாமதமாக அங்குவந்த தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) இயக்கத்தைச்சேர்ந்த சிலர் கழகத்தோழர்களே இக் கொலைகளை செய்துள்ளதாகவும், தாம் பழிவாங்காது விடமாட்டோம் எனவும், இன்னும் பல பொறுப்பற்ற வார்த்தைகளாலும் தூற்த ஆரம்பித்ததால் எமது கழகத் தோழர்கள் அநாவசியமான மோதலைத் தவிர்க்குமுகமாக அவ்விடத்திலிருந்து அகன்றார்கள். பின்பு சடலங்கள் கிராம மக்களால் தோண்டி எடுக்கப்பட்டு எரிக்கப்பட்டது.

அதன் பின்னர் வெளியிலும், தளத்திலும் கழகத் தோழர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளைச் (LTTE) சேர்ந்த ஆறு பேரை கொலை செய்துவிட்டதாக பிரச்சாரம் செய்தார்கள்.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழீழ விடுதலை இயக்கத்தை (TELO) சம்பந்தப்படுத்தி பிரச்சாரம் செய்துள்ளார்கள்.

இதனை நாம் எமது தமிழீழத்தின் குரல் வானொலி மூலமும் மறுத்துள்ள போதும். விடுதலைப்புலிகளால் எம்மீது பழி சுமத்தி துண்டுப் பிரசுரம் வெளியிட்டுள்ளனர். இதனை அடுத்து கழக முக்கிய தோழர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள்

படிப்பகம்

www.padippakam.com

(LTTE) இன் முக்கிய தோழர்களை சந்தித்து இதுபற்றி பேசப்பட்டது. அப்போது தாங்கள் இதுபோன்ற எந்தப் பிரச்சாரத்தையும் மேற்கொள்ளவில்லை எனவும், இது சம்பந்தமாக தாம் ஆராய்ந்து கொண்டிருப்பதாகவும்' வேறு ஒருசில இயக்கத்தினரே இப்பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளனரென்றும் கூறினர். தற்போது இப்படுகொலைகளுக்கு கழகத்தோழர்களே பொறுப்பாளர்கள் என்று எந்தவித ஆதாரமும் இல்லாத குற்றம் சுமத்தியுள்ளார்கள். சம்பந்தப்பட்டவர்களை நாம் கடத்தியதாகவும், பின்னர் கொலை செய்ததாகவும் கூறும் எந்த ஆதாரமுமற்ற அவதூறு பரப்பும் நோக்கம் கொண்ட குற்றச் சாட்டுகளை உறுதியாக மறுக்கிறோம். தாம் வழமையாகச் செய்து வரும் (ஆயுத முனையில் விடுதலைப் போராளிகளை மிரட்டும்) கைங்கரியத்தை செய்ததாக கூறும் அவதூறான ஆதாரமற்ற பிரச்சாரங்களை உடன்நிறுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ் மக்கள்மீது சிங்கள அரசு தனது யுத்தத்தை தொடுத்துள்ளது. பல ஆயிரக்கணக்கானோர் இராணுவ வதை முகாம்களில் பணயக்கைதிகளாக வைக்கப்பட்டுள்ளார்கள். பல நூற்றுக் கணக்கானோர் படுகொலை செய்யப்படுகிறார்கள். விடுதலை இயக்கங்கள் கருத்து வேறுபாடுகளையும் சொந்த பகைமைகளையும் மறந்து ஒற்றுமைப்பட வேண்டிய கால கட்டம் இது எனவலியுறுத்தி வருகிறோம். இப்படிப்பட்ட காலகட்டத்தில் இதுபோன்ற காட்டுமிராண்டித்தனம் யாரால் செய்யப்பட்டிருந்தாலும் அது கண்டிக்கப்படவேண்டியதே. இவர்கள் மக்களால் இனம் கண்டு நிராகரிக்கப்பட வேண்டியவர்களே ஆவர்.

ஆனால் இதன் பின்னணிகளை ஆழமாக ஆராயாமல் போதிய, தகுந்த ஆதாரங்களை காட்டாமல் ஏதோ எமது தோழர்கள் நடமாடுவதாக கருதப்படும் பிரதேசங்களுக்கு அருகில் பிரேதங்கள் காணப்பட்டதால் மட்டும் எம்மை குற்றவாளியென காட்ட முயல்வது ஒன்று தற்செயலானது அல்ல. சதி நோக்கம் கொண்டதே என்று கருதவேண்டியுள்ளது.

இந்த இளைஞர்களுடைய கொலைக்கு பல்வேறுபட்ட காரணங்கள் இருக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதை நாம் கவனிக்கவேண்டும்.

### 1. அரச கூலிப்படையின் சதி

மொசாட்டின் ஆலோசனையில் இயங்கும் சிறீலங்கா அரசானது இயக்கங்களுக்கிடையில் முக்கியமாக, கழகத்துக்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் சுமுகமான உறவு நிகழ்வதனை தடுக்கவேண்டும் என்ற நோக்கில் பல சதிச் செயல்களை தொடர்ந்து செய்து வந்துள்ளது. இதற்காக எமது சாதனங்களையே பயன்படுத்த முயன்று வந்ததுண்டு. இயக்கங்களின் பெயரால் துண்டுப் பிரசுரங்களை வெளியிடுதல்; சுவரொட்டிகளை ஒட்டுதல், கழக வானொலியின் பெயரிலேயே விடுதலைப் புலிகளையும் அதன் தலைவரையும் தூற்றுதல் போன்ற நிகழ்வுகளை கடந்த காலங்களில் முகம் கொடுத்துள்ளோம். இயக்கங்கள் தமக்கிடையே சுமுகமாக இவற்றை பேசிக்கொண்டதால் இலகுவில் இனம் காணக்கூடியதாக இருந்தது. அரசின் அடுத்த முயற்சியாக இக்கொலைகள் அமைந்திருக்கலாம். எம்மிடையே மோதல்களை உருவாக்கி எம்மைப் பலவீனப்படுத்த எமது எதிரியான சிறிலங்கா இராணுவத்தினரால் செய்யப்பட்ட நடவடிக்கையாகவுமிருக்கலாம்.

### 2. ஏனைய இயக்கங்களிடையே முரண்பாடுகளின் விளைவு

நடைமுறையில் இயங்கிக் கொண்டிருக்கும் இயக்கங்களிடையில் கருத்து முரண்பாடுகள், நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததே. ஆனால் இவை பகை முரண்பாடல்ல. இவை சாதாரணமாக பேச்சுவார்த்தைகளினால் தீர்க்கப்படக்கூடியவை.

ஆனால் கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப்புலிகள் (LTTE) இந்த முரண்பாடுகளை தவறான முறையில் தனது குத்தகைக்கார மனோபாவத்துடன் அணுகியிருப்பது குறிப்பிடத்தக்கது. தமது அடாவடித்தனங்களினால் இந்த பகைமையற்ற முரண்பாடுகளை பகையான முரண்பாடுகளாக மாற்றியுள்ளது. இன்று தயார் நிலையிலுள்ள ஏறக்குறைய எல்லா விடுதலை இயக்கங்களுடனும் பகைமை கொண்டுள்ளது. இதன் காரணமாக இதுபோன்ற விளைவை தோற்றியிருக்கலாம்.

### 3. புலிகள் இயக்கத்தின் அகமுரண்பாடுகளின் விளைவு

தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) இயக்கமானது தனது அகமுரண்பாடுகளை எப்போதும் ஆயுதமுனையில் தீர்ப்பதும் பின்பு அவர்களை துரோகி என முத்திரை குத்துவதும் தமிழீழ மக்களுக்கு ஒன்றும் புதிய அனுபவங்கள் அல்ல.

குறிப்பிட்ட அந்த தோழர்களின் மறைவிற்கு இது போன்ற பல சாத்தியப்பாடுகள் இருந்தபோதும் மிக அவசரமாக தகுந்த ஆதாரங்கள் இன்றி எமது கழகத்தின் மீது குற்றங்களைச் சுமத்திய தன்மையானது எமது சந்தேகங்களை மேலும் வலுப்படுத்தியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) தனது சதியில் ஆரம்ப கட்டத்தை இந்த கொலைகளுடன் ஆரம்பிக்கத் தொடங்கியுள்ளார்கள் என்றே கருதுகிறோம். ஏனெனில் இவர்களுடைய கடந்தகால வரலாற்றை விபரமாக தெரிந்து கொள்ளும் எவரும் இவர்களது சதிச் செயல்களை, கொலை வெறித்தனங்களை கண்டு பிரமிப்பர்.

1. கழகம் தனது நடவடிக்கைகளைத் தொடங்கியபோது அதன் வளர்ச்சியில் பொறாமையுற்று 'புதிய பாதை' ஆசிரியரும் அப்போதைய படைத்துறைச் செயலருமான தோழர் சுந்தரம் அவர்களை கொலை செய்ததன் மூலம் ஒரு மக்கள் இயக்கத்தை அழிக்க முயன்றனர்.

2. தமிழீழ விடுதலை இராணுவத்தின் (TELA) தலைவர் தோழர் ஒபரேய் தேவன் தமிழீழ விடுதலை புலிகள் (LTTE) இயக்கத்தினரால் கொலை செய்ததன் மூலம் அவ்வியக்கத்தை அழிக்க முற்பட்டனர்.

3. துரிதமாக வளர்ச்சியுற்ற தமிழீழ விடுதலை இயக்கத்தின் (TELO) வளர்ச்சியில் பொறாமையுற்று அதனுள் தனது உளவாளிகளை அனுப்பி அவ்வியக்கத் தலைவர் சிறீ சபாரத்தினம் அவர்களை கொலை செய்ய முன்றார்கள். இது தோல்வியில் முடிந்தது. இந்த குழப்பமான சூழ்நிலையை பயன்படுத்தி தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தில் இருந்து முன்னர் பிரிந்த அதன் முன்னணித் தோழ

படிப்பகம்

www.padippakam.com

ஏனை பஞ்சலிங்கம் (முறை மாஸ்டர்) அவர்களைக் கொலை செய்து விட்டு உரிமை கோராது விட்டார்கள். இக் கொலையை தமிழீழ விடுதலை இயக்கத்தினரால் (TELO) செய்யப்பட்டதாக வதந்தியைப் பரப்பினர்.

4. தோழர் தம்பாப்பிள்ளை மகேஸ்வரனை தலைவராகக் கொண்ட தமிழீழ இராணுவத்துள் (TEA) தனது ஏஜன்டுகளை அனுபபி அந்த இயக்கத்தை பிளவு படுத்தினர்.

5. தளத்தில் இவர்கள் பாணியிலேயே தீவிரமான தாக்குதல்களை மேற்கொண்டு வந்த தமிழீழ விடுதலைத் தீவிரவாதிகள் (TELE) இயக்கத்தில் தனது உளவாளிகளை ஊடுருவ விட்டு அந்த இயக்கத்தின் தலைவர் தோழர் ஜெகன் அவர்களை கொலை செய்து விட்டு தவறுதலாக நடந்த கொலை என வெகு சுலபமாக அறிக்கை விட்டு மக்களை ஏமாற்றியுள்ளனர். அத்துடன் தம்மால் அனுப்பப்பட்ட ஏஜென்டுகள் மூலம் தமிழீழ விடுதலைத் தீவிரவாதிகள் வெளியிட்டது போன்று ஒரு போலித் துண்டுப் பிரசுரமும் விட்டுள்ளனர்.

6. மீண்டும் 2ம் தடவையாக தமிழீழ விடுதலை இராணுவத்திலுள்ள சில உறுப்பினர்களை விலைக்கு வாங்கினார்கள். தலைமைப் பதவிக்கு ஆசை காட்டினார்கள். தமது ஏஜன்டுகளாக மாறுமாறு நிர்ப்பந்தித்தார்கள். விளைவு தமிழீழ விடுதலை இராணுவத் தலைவர் தோழர் கஸ்ரோ இராணுவத்தினரிடம் காட்டிக் கொடுக்கப்பட்டார். தோழர் கஸ்டோவுக்கு நம்பிக்கையான சில முன்னணித் தோழர்கள் கொலை செய்யப்பட்டார்கள். முழு இயக்கத்தையும் அழிக்கும் முயற்சி இறுதி நேரத்தில் முறியடிக்கப்பட்டது.

இதுபோன்ற பல சதிச் செயல்களை செய்வதில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் (LTTE) கைதேர்ந்தவர்கள். இந்த சம்பவங்களின் அடுத்தபடியாகத்தான் இந்த கொலைச் செயல்களை எம்மால் பார்க்க முடிகிறது. இந்தக் குற்றச்சாட்டுக்கள் ஒன்றும் எமது கற்பனையாய் உருவாக்கப் பட்டவை அல்ல. இதற்கான ஆழமான காரணங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் (LTTE) தமக்குள்ளேயே கொண்டுள்ளர்.

தமது கடந்தகால அடாவடித்தனங்களாலும் தவறான கொள்கையினாலும் மக்கள் நலன்களை கருத்திற் கெடுக்காத, மக்களை கடுமையாக பாதிக்கக்கூடிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு அதன்மூலம் மக்கள் வெறுப்புக்குள்ளாகி மக்கள் மத்தியிலிருந்து அந்நியப்பட்டுள்ளார்கள். குறிப்பாக வட்டுக்கோட்டை, பண்ணாகம், சுழிபுரம், பண்டைத்தரிப்பு பகுதி மக்கள் இவர்களை பூரணமாக நிராகரித்த நிலையில் இந்தப் பகுதி இளைஞர்கள் ஆறுபேரையும் கொலை செய்து பழியை எம்மீது போடுவதனால் தமது கடந்தகால கறைகளை போக்கி கொள்ளலாமென கனவு காண்கிறார்கள். சரியான அரசியல் முன்னெடுப்போ, தாபன அமைப்போ இல்லாத தனி நபர் வழிபாட்டியக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினுள் (LTTE) கருத்து முரண்பாடுகள் அடிக்கடி வருவதும் பல முக்கிய தோழர்கள் இயக்கத்திலிருந்து ஒதுங்க முயல்வதும் வழமையானது. பொதுவாக இயக்கங்களுள் இதுபோன்ற கருத்து முரண்பாடு வருவது வழமை. இவை உட்கட்சிப் போராட்டத்தினூடாகவோ, அல்லது சுமுகமான பேச்சு வார்த்தைகள் மூலமாகவோ தீர்த்து வைக்கப்படுவதே வழமை. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை (LTTE) பொறுத்தவரையில் அந்த பிரச்சனைகளை பாரியதாக்குதல் நடவடிக்கைகளை நடத்துவதன் மூலம் அல்லது ஏனைய இயக்கங்களோடு மோதலை ஏற்படுத்தி விடுவதன் மூலம் திசை திருப்பிவிடுவது வழமையானது.

இன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலே விஸ்வரூபம் எடுத்துள்ள அகமுரண்பாடுகளை நோக்கும்போது அதனை திசை திருப்புவதற்காக எம்முடன் மோதவிடுவதற்கான செயற்பாடுகளை செய்திருப்பார்கள் என கருதவேண்டியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் (LTTE) கடந்த காலங்களில் ஏனைய சகவிடுதலை இயக்கங்களை கருத்திற் கெடுப்பதோ, அவர்களது நடவடிக்கைகளை மதிப்பதோ கிடையாது. இதன் காரணமாகவே இவர்கள் எப்போதும் இயக்கங்களின் ஐக்கியத்தை நிராகரித்து இயக்கங்களுடனான மோதலை முதன்மைபடுத்தி வந்துள்ளார்கள். ஆனால் போராட்ட அனுபவமும், வளர்ந்துவரும் நெருக்கடிகளும் அவர்களது தவறான நிலையை வெளிச்சத்துக்கு கொண்டுவந்துள்ளது. இதனால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் (LTTE) மேல்மட்ட புத்தி ஜீவிகள் மத்தியிலும், தளத்தில் ஒன்றாக வேலை செய்யும் கீழ்மட்ட தோழர்கள் மத்தியிலும் இதுவரை கைக்கொண்டுவந்த தனி நபர் நோக்கிற்கு (செக்டேரியன் பார்வைக்கு) மாறான கருத்துக்கள் வளர ஆரம்பித்துள்ளன. அவர்கள் முக்கியமாக கழகத்துடன் ஒரு பொது வேலைத்திட்டத்திற்கு வரவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த ஆரம்பித்தார்கள்; இதிலிருந்து தப்பித்துக் கொள்ள அந்த இயக்கம் கையாண்ட செயல்தான் இந்த கொலைகள் என்று கருதுகிறோம். இச்சம்பவங்கள் மூலமாக எமது கழகத்தை தமது இயக்கத்தின் முதல் எதிரியாக தங்கள் தோழர்கள் மத்தியில் காட்ட முனைந்துள்ளார்கள்.

இதுபோன்ற பல அக—புற முரண்பாடுகளுக்கான அடிப்படைக் காரணங்களை கண்டு பிடித்து தீர்க்காமல் அவற்றை வேறு திசைகளில் திருப்பி விடுவதன் மூலம் தப்பித்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள். இது அவ்வப்போது ஓரளவு பயன்களை அளித்தாலும் நீண்ட காலத்திற்கு அந்த இயக்கத்திற்கு மாத்திரமின்றி அனைத்து மக்களுக்குமே மோசமான தீமைகளை விளைவிக்கும் என்பதை எச்சரிக்கிறோம்.

இவற்றைவிட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தமது ''கொலை செய்யப்படவேண்டியவர்களின் பட்டியலை'' அடிக்கடி தாயாரிப்பதும் அவர்கள் கொலை செய்வதற்கான சதி நாடகங்களை அரங்கேற்றுவதும் உலகறிந்த இரகசியமாகும்.

படிப்பகம்

www.padippakam.com

இத்தகைய காலகட்டத்தில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT) தனது சரியான அணுகு முறைகளால் மக்கள் மத்தியிலும், இராணுவ ரீதியிலும், சர்வதேச மட்டத்திலும் பெற்றுள்ள வளர்ச்சியை ஜீரணிக்க முடியாத இந்த சதிகார கொலைகார கும்பல் தனது சதி நாடகத்தை தொடங்கியுள்ளது.

இதன் முதலாவது அத்தியாயம்தான் ஆறு இளைஞர்களின் கொலையாகும். இதனை பின்னணியாக வைத்து தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துக்கெதிராக அவதூறுகளையும், பழிகளையும் சுமத்த ஆரம்பித்துள்ளது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தை சிறீலங்கா அரச இராணுவத்திலிருந்து வேறுபடுத்தி பார்க்கமுடியாதுள்ளதாக தெரிவித்துள்ளார்கள். இதுபோன்ற நிலைகளையும் கருத்துக்களையும் வேண்டுமென்றே திட்டமிட்டு உருவாக்கி எமது முன்னணித் தோழர்களுக்கெதிரான தமது கொலைகார நடவடிக்கைகளை தமது இரண்டாவது அத்தியாயமாக முன்னெடுக்க முனைந்துள்ளார்கள்.

இந்த ஆறு இளைஞர்களின் மரணம் கொலை என தமிழீழ விடுதலைப் புலிகள் (L.T.T.E) இயக்கத்தினர் கருதுவார்களாயின் அவற்றுக்கான சரியான காரணத்தை முறையாக ஆராய்ந்து கண்டறிய வேண்டும். அல்லது சதி முயற்சியாயின் அதனை இத்துடன் உடனடியாக நிறுத்திவிட வேண்டும்.

இந்தக் காலகட்டம் நெருக்கடி மிகுந்தது. எமது மக்கள் அநாதரவாக, பாதுகாப்பற்ற நிலையில் சிங்கள கூலிப்படையினரால் வேட்டையாடப்படுகிறார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் இயக்கங்களின் ஐக்கியமும், துரித நடவடிக்கையுமே அவசிய தேவை என்பதை உறுதியாகவும் விசுவாசமாகவும் நம்புகிறோம். இந்த ஐக்கியம் ஒன்றுதான் மக்களின் நம்பிக்கையை காப்பாற்றுவதுடன் எமது போராட்டத்தையும் மேற்கொண்டு செல்ல உதவும். ஆதலால் ஒவ்வொரு இயக்கத்தினரும் இன்றைய வரலாற்றுத்தேவையை சரியாக உணர்ந்து தமது தனிப்பட்ட கோப தாபங்களை, பொறாமை உணர்வுகளை கைவிட்டு ஒரு உண்மையான ஐக்கியத்திற்கு முன்வருதல் அவசியமானது. சதிச் செயல்களையும் ஆதாரமற்ற அவதூறான பிரச்சாரங்களையும் கைவிட்டு சரியான புரிந்துணர்வுக்கு வருமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தவர்களை தமிழீழ மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

இக்கட்டான இக்கால கட்டத்தில் இத்துண்டுப் பிரசுரத்தை பிரசுரிக்க வேண்டி ஏற்பட்டதையிட்டு வேதனையடைகிறோம்.

''காட்டிக் கொடுக்கும் கயவர்கள்'' என்று எமது கழகத்தின் மீதும், சகோதர இயக்கமான தமிழீழ விடுதலை இயக்கத்தின் மீதும் குற்றஞ்சாட்டி கடந்த 31-8-84ல் தமிழீழ விடுதலைப் புலிகளால் பிரசுரிக்கப்பட்ட துண்டுப் பிரசுரத்திற்கும் நாம் ''ஒற்றுமையே பலம்'' என்றுதான் பதில் அளித்திருந்தோம். கடந்த 1983 மார்கழியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அனுமதேயமாக வெளியிட்ட ''விடுதலைப் பாதையில்'' எனும் துண்டு பிரசுரத்திலும், எம்மைப் பற்றி அவதூறாக சிங்கள அரசின் பத்திரிகைகளில் சிங்கள இராணுவ அதிகாரிகளினால் வெளியிடப்பட்ட தவறான தகவல்களை ஆதாரம் காட்டி பிரசுரித்திருந்ததிற்கும் பெரும் தன்மையுடன் நாம் விமர்சனங்களை வரவேற்கிறோம் என்றே எழுதியிருந்தோம். ''விடுதலைப் புலிகள்'' முதலாவது இதழிலும் எம்மைப் பற்றி வந்த தூற்றலுக்கு ''வாழ்த்துகிறோம், வரவேற்கிறோம்'' என்றே பதிலளித்திருந்தோம். ஆனாலும் தொடர்ந்தும் இவ்வாறான அவதூறான பிரச்சாரங்களை நாம் அனுமதிக்க முடியாத நிலையிலும், உண்மைகளை தெளிவுபடுத்த வேண்டியதாலுமே இப் பிரசுரத்தை வெளியிட வேண்டிய நிலைக்குள்ளானோம்.

இக்கட்டான காலகட்டத்தில் விடுதலை இயக்கங்களுக்குள் மோதலை உருவாக்கி, எமது விடுதலையை பின்னடைய செய்யும் சிறிலங்கா இனவாத அரசின் நோக்கங்களுக்கும் சதிக்கும் நாமும் பலியாகாமல் எமக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளையும் சந்தேகங்களையும் பரஸ்பரம் பேசிதீர்ப்பதே தமிழினத்தின் விடிவிற்கு வழியாகும் என்பதை சக இயக்கங்களும்உணர்ந்துகொள்ளுமென எதிர் பார்க்கிறோம்.

★

''வெல்க தமிழ் மக்கள் போராட்டம்
ஓங்குக விடுதலை இயக்கங்களின் ஐக்கியம்''

**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்**

செய்தி—தொடர்பு திணைக்களம்

படிப்பகம்